DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 129/2022

Prosecution side witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சரவணமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.07.2025.**

Accused is absent. U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது துாத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2017 ஆம் வருடம் துாத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது காவலர் எண். கிரேடு 1, 876 ஆகும். 20.11.2017 ஆம் தேதி மாலை 15.00 மணிக்கு கொப்பம்பட்டி காவல்நிலைய உதவி ஆய்வாளர் ஆர்தர் ஜெஸ்டின் சாமுவேல்ராஜா அவர்களுடன் நான், மற்றொரு சார்பு ஆய்வாளர் மாணிக்கராஜ், பெண் தலைமை காவலர் 628 சித்ராஆகிய 4 பேரும் சிவந்திபட்டி – முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் சிவந்திபட்டி விலக்கில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, முடுக்கலான்குளத்தை சேர்ந்த சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என்பவர் கையில் பச்சை கலர் சிறிய பிளாஸ்டிக் வாளியில் நின்றவர் எங்களை பார்த்தவுடன் ஓட எத்தனித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து உதவி ஆய்வாளர் விசாரிக்க அவர் அந்த பிளாஸ்டிக் வாளியில் 2 நாட்டு வெடிகுண்டை வைத்திருந்தார். அதை பற்றி விசாரிக்க தனக்கு துாத்துக்குடி மாவட்டம், ஆத்துார் காவல்நிலையத்தில் இரட்டை கொலை வழக்கு உள்ளது என்றும், அதற்காக தற்காப்பிற்காகவும், ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் பயன்படுத்த வேண்டுமென்று நாட்டுவெடிகுண்டுகளை வைத்திருப்பதாகவும் சொல்லி வாளியுடன் ஆஜர் செய்தார். அதை தன் கையில் வைப்பதற்காக எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் வைத்திருந்தார். அதற்காக உதவி

ஆய்வாளர் அவரை கைது செய்து, அத்தாட்சி பிறப்பித்து வாளியுடன் கூடிய நாட்டுவெடிகுண்டை கைப்பற்றினார். அதற்கான அத்தாட்சியில் 2 வதாக நான் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். அந்த அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து **அ.சா.ஆ– 5** ஆகும். பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்கள் சகிதம் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்று கொப்பம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 85/2017 சட்டபிரிவுகள் 4(a) 5 of Explosive substances Act ன்படி வழக்கு பதிவு செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 129/2022

Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முத்துகண்ணன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.07.2025.**

Accused is absent. U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டி காலனிதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். நான் எந்த தோட்டத்தில் வேலைக்கு சென்

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 129/2022

Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முத்துகண்ணன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.07.2025.**

Accused is absent. U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டி காலனிதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். நான் எந்த தோட்டத்தில் வேலைக்கு சென்றேன் என்றால் யார் கூப்பிட்டாலும் வேலைக்கு செல்வேன். வேல்சாமி மகன் சாட்சி பாலமுருகன் என்பவரை தெரியும். முடுக்கலான்குளம் சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமியை தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்குஒன்றும் தெரியாது. போலீசார் என்னிடம் கையெழுத்துகேட்டார்கள் காவல்நிலையத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும்போது பெருமாள்சாமியை கைது செய்யும்போது உடன் இருந்ததாகவும், பொருளை கைப்பற்றும்போது உடன் இருந்ததாகவும் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் எதிரி பெருமாள்சாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், பொருளை கைப்பற்றிய அத்தாட்சியிலும் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அது எங்கு வைத்து எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்றால் நினைவில்லை. எதிரி பெருமாள்சாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ–6, அ.சா.ஆ–7** ஆகும்.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, கடந்த 20.11.2017 ஆம் தேதி 17.00 மணிக்கு நானும் எனது தெருவை சேர்ந்த வேல்சாமி மகன் பாலமுருகனும் நின்று பேசிக்கொண்டிருக்கும்போது கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு கொப்பம்பட்டி ஒரு வழக்கில் எங்களை சாட்சியாக இருக்க எங்களை அழைத்தன்பேரில் நாங்கள் இருவரும் நிலையம் வந்து நிலையத்தில் இருந்த முடுக்கலான்குளம் சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என்பவரை ஆய்வாளர் எங்கள்முன்னிலையில் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை பற்றியும், இந்த வழக்கு சம்பவம் பற்றியும் கூறினார் என்றும், தன்னிடமிருந்த நாட்டு வெடிகுண்டை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும், அதை தயாரிக்க பயன்படுத்தியது போக மீதி வெடிமருந்து சுமார் ½ கிலோவை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு யாருக்கும் தெரியாமல் தனது தோட்டத்தில் பம்பு செட் ரூம் கட்டுவதற்காக தோண்டிப்போடப்பட்ட கிடங்கில் மறைத்து வைத்திருப்பதாக கூறினார் என்றும், தன்னை அழைத்து சென்றால் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறியவரை எங்களுடன் அவரையும் அழைத்து சென்று பெருமாள்சாமி அவரது தோட்டத்தில் மறைத்து வைத்திருந்த பிளாஸ்டிக் பையில் இருந்த சுமார் ½ கிலோ எடையுள்ள வெடிமருந்தை எங்கள் முன்னிலையில் அன்றையதினம் 18.40 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சியில் நானும், பாலமுருகனும் கையெழுத்து போட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 129/2022

Prosecution side witness for P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பாலமுருகன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.07.2025.**

Accused is absent. U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டி போலீஸ் ஸ்டேசன் எதிரே உள்ள காலனிதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் மரம்வெட்டும் கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.5 முத்துகண்ணனை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். முடுக்கலான்குளம் சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமியை தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பெருமாள்சாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 8** ஆகும். பொருட்களை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 9** ஆகும். இந்த கையெழுத்துக்களை எதற்காக எங்கு வைத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து சாட்சிக்காக கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். எங்கள் முன்னிலையில் எதிரி பெருமாள்சாமியை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, கடந்த 20.11.2017 ஆம் தேதி 17.00 மணிக்கு நானும் எனது தெருவை சேர்ந்த குருசாமி மகன் முத்துகண்ணன் நின்று பேசிக்கொண்டிருக்கும்போது கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு கொப்பம்பட்டி ஒரு வழக்கில் எங்களை சாட்சியாக இருக்க எங்களை அழைத்தன்பேரில் நாங்கள் இருவரும் நிலையம் வந்து நிலையத்தில் இருந்த முடுக்கலான்குளம் சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என்பவரை ஆய்வாளர் எங்கள்முன்னிலையில் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை பற்றியும், இந்த வழக்கு சம்பவம் பற்றியும் கூறினார் என்றும், தன்னிடமிருந்த நாட்டு வெடிகுண்டை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும், அதை தயாரிக்க பயன்படுத்தியது போக மீதி வெடிமருந்து சுமார் ½ கிலோவை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு யாருக்கும் தெரியாமல் தனது தோட்டத்தில் பம்பு செட் ரூம் கட்டுவதற்காக தோண்டிப்போடப்பட்ட கிடங்கில் மறைத்து வைத்திருப்பதாக கூறினார் என்றும், தன்னை அழைத்து சென்றால் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறியவரை எங்களுடன் அவரையும் அழைத்து சென்று பெருமாள்சாமி அவரது தோட்டத்தில் மறைத்து வைத்திருந்த பிளாஸ்டிக் பையில் இருந்த சுமார் ½ கிலோ எடையுள்ள வெடிமருந்தை எங்கள் முன்னிலையில் அன்றையதினம் 18.40 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சியில் நானும், முத்துகண்ணனும் கையெழுத்து போட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை இல்லை.